SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

விசுவாவசு வருடம் சித்திரை 13 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ஷவ்வால் 27

மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews

● புதுச்சேரி ● சனிக்கிழமை, ஏப்ரல் 26, 2025 ● வெளியூர்: 27-4-2025, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 281 ● 8 பக்கம் ● ரூ.6

## பஹல்காம் தாக்குதலில் நடுநிலையான விசாரணைக்கு தயார்: பாகிஸ்தான் பிரதமர்



**லாகூர், ஏப். 26-**

காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதியில் சுற்றுலா தளத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டுவரும் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது. அதில் முக்கியமாக சிந்து நதி நீர் ஒப்பந்தத்தில் இருந்து இந்தியா விலகியுள்ளது. மேலும், பாகிஸ்தானுக்கு பாயும் சிந்து நதியை இந்தியா நிறுத்தியுள்ளது. இந்தியாவின் இந்த நடவடிக்கை போருக்கான அறிவிப்பு என பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதலில் நடுநிலையான விசாரணைக்கு தயார் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், பஹல்காம் தாக்குதலில் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய நடுநிலையான விசாரணைக்கு பாகிஸ்தான் தயாரக உள்ளது. அதேவேளை, இந்தியாவின் எந்தவிதமான மோதல்போக்கையும் எதிர்கொள்ள பாகிஸ்தான் தயாராக உள்ளது' என்றார்.

## நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்றுவந்த மாணவன் விஷம் குடித்து தற்கொலை

**ஜெய்ப்பூர், ஏப். 26-**

தலைநகர் டெல்லியின் துக்லகாபாத் பகுதியை சேர்ந்தவர் ரஞ்சித் சர்மா. இவர் மரக்கடை நடத்தி வருகிறார். இவரின் மகன் ரோஷன் சர்மா (வயது 23). இவர் கடந்த 3 ஆண்டுகளாக ராஜஸ்தானில் உள்ள கோடா பகுதியில் உள்ள நீட் பயிற்சி மையத்தில் தங்கி நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்தார்.

இதனிடையே, கடந்த சில நாட்களுக்குமுன் ரோஷன் சர்மாவின் தந்தை, தாயார் கோடா நகருக்கு சென்றுள்ளனர். அங்கு நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்றது போதும் வீட்டிற்கு வந்துவிடு என ரோஷன் சர்மாவிடம் கூறியுள்ளனர். அதற்கு மாணவன் மறுப்பு தெரிவித்துள்ளான். இதையடுத்து, ரோஷன் சர்மாவின் உடைமைகளை எடுத்துக்கொண்டு பெற்றோர் டெல்லி வந்துள்ளனர்.

இதனால் மன உளைச்சல் அடைந்த ரோஷன் சர்மா கடந்த புதன்கிழமை தனது சகோதரியை செல்போனில் தொடர்பு கொண்டுள்ளார். நீட் தேர்வில் தேர்ச்சிபெற இன்னும் ஓராண்டு படிக்க வேண்டும். இந்த முறை என்னால் தேர்வு எழுத முடியாது என கூறிவிட்டு அழைப்பை துண்டித்துள்ளார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள ரெயில் நிலையம் அருகே சென்ற ரோஷன் சர்மா விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார். விடுதியின் அறையில் தங்கி இருந்த ரோஷன் சர்மா வெகுநேரமாகியும் திரும்பி வராததால் சந்தேகமடைந்த சக மாணவர்கள் இது குறித்து போலீசில் தெரிவித்துள்ளனர். இதையடுத்து விசாரணை மேற்கொண்ட போலீசார், ரெயில் தண்டவாளம் அருகே புதரில் ரோஷன் சர்மா பிணமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

ரோஷனின் உடலை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். நடப்பு ஆண்டில் மட்டும் கோடாவில் நீட் பயிற்சி பெற்றுவந்த 18 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டுக்கான நீட் தேர்வு அடுத்த மாதம் 4ம் தேதி நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்து: 3 பேர் உயிரிழப்பு



**விருதுநகர், ஏப். 26-**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே எம்.புதுப்பட்டியில் உள்ள பட்டாசு ஆலை ஒன்றில் இன்று காலை திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. இது குறித்த தகவல் கிடைத்ததும், சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் பட்டாசு தொழிற்சாலை தொழிலாளிகள் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் காயம் அடைந்தனர். ஆலையில் உள்ள 5 அறைகள் இடிந்து தரைமட்டமாகின. காயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### யுபிஎஸ்சி தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு பாராட்டு விழா

# மாணவர்களின் திறனை மேம்படுத்தவே 'நான் முதல்வன் திட்டம்'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



**சென்னை, ஏப். 26-**

சென்னையில் நடைபெற்ற யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது; "மாணவர்களின் திறனை மேம்படுத்தவே நான் முதல்வன் திட்டம் கொண்டு வரப்பட்டது. கல்விதான் நம் ஆயுதம். எந்த இடர் வந்தாலும் கல்வியை மட்டும் நாம் விட்டு விடக் கூடாது. தமிழ்நாட்டிற்கென அறிவு முகம் இருக்கிறது. தமிழ்நாட்டை சேர்ந்த அதிகாரிகளுக்கு தனி மதிப்புள்ளது. எப்படிப்பட்ட போட்டித் தேர்வாக இருந்தாலும் நமது மாணவர்கள் வெற்றிபெறவே நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது.

அதிகாரம் என்பது சக மனிதர்களுக்கும், சமூகத்திற்கும் உதவுவதாக இருக்க வேண்டும். மக்களின் மனதில் நாம் இடம்பெற வேண்டும். மக்களின் உயர்வுக்காக பாடுபட வேண்டும். கடமையை நிறைவேற்றிய தந்தைக்கு கிடைக்கும் மகிழ்ச்சியை எனக்கு கொடுத்திருக்கிறீர்கள்.

இந்தியாவோட எந்த மூலைக்கு நீங்க பணியாற்ற போனாலும், சமத்துவம், சமூகநீதி, வாய்மை, நேர்மை ஆகியவற்றை மனசுல வெச்சு, ஏழை எளிய மக்களோட உயர்வுக்காகப் பாடுபடுங்கள். உங்களோட சிந்தனையால் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டால், மக்களோட மனதில் ஒரு நிரந்தர இடம் கிடைக்கும்." இவ்வாறு அவர் பேசினார்.

## கடனை வலுக்கட்டாயமாக வசூலித்தால் சிறை: புதிய மசோதாவை தாக்கல் செய்தார் உதயநிதி ஸ்டாலின்

**சென்னை, ஏப். 26-**

தனிநபர்கள், சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்டவற்றிற்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக வசூலிப்பதைத் தடுக்க வகை செய்யும் புதிய சட்டத் திருத்த மசோதாவை சட்டசபையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்தார். புதிய சட்டத் திருத்த மசோதாவில் உள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு;

"* தனிநபர்கள், தனி நபர்கள் குழு, சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்டவற்றிற்கு கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணக்கடன்கள் வழங்கும் நிறுவனங்களின் வலுக்கட்டாய வசூலிப்பு முறைகளால் பொதுமக்கள் மிகுந்த இன்னல்களுக்கு உள்ளாகின்றனர்.

* இந்த சட்டத்திருத்தத்தின் படி, கடன் பெறுவோருக்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே உள்ள பூசல்களை தீர்த்துவைக்க குறைதீர்ப்பாயரை அரசு நியமிக்கலாம்.

* கடன் வழங்கிய நிறுவனம் கடன் பெற்றவரோ அல்லது அவரது குடும்பத்தினரையோ வலுக்கட்டாய நடவடிக்கைக்கு உட்ப்படுத்தவோ, மிரட்டவோ, பின் தொடரவோ, அவர்களது



சொத்துக்களை பறிக்கவோ கூடாது.

* கடன் பெற்றவரிடமோ அல்லது அவரது குடும்பத்தினரிடமோ வலுக்காட்டாயமாக வசூலிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ஐந்து லட்சம் ரூபாய் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

* வலுக்கட்டாய நடவடிக்கைகளால் கடன்பெறுபவர் அல்லது அவரது உறுப்பினர்கள் எவரேனும் தற்கொலை செய்து கொண்டால் கடன் கொடுத்த நிறுவனம் தற்கொலைக்கு தூண்டியதாக கருதப்படுவார்கள்.

* இச்சட்டமுன்வடிவின் படி தண்டனைக்குரிய குற்றங்களில் கைது செய்யப்படுவோர் பிணையில் வெளிவரமுடியாது.

கடன் வழங்கும் நிறுவனங்கள் அதனை வசூலிக்க முறையற்ற வழியை நாடுகின்றனர். பொருளாதாரத்தில் பின் தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரை பாதுகாக்கும் வகையில் இம்மசோதா கொண்டுவரப் பட்டு ள்ளது என துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

## பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரணம்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, ஏப். 26-**

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் திரவுபதி அம்மன் கோவில் திருவிழா 27 ஆண்டுகளுக்குப்பின் நேற்று நடைபெற்றது. இந்த திருவிழாவில் 18 கிராமங்களை சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.

விழாவின்போது நேற்று சாமி திருக்கல்யாண நிகழ்ச்சிக்கான சீர் வரிசை பொருட்களை ஊர்வலமாக கொண்டு சென்றபோது பட்டாசு வெடிக்கப்பட்டது. அப்போது, பைக்கில் மூட்டையில் கொண்டு செல்லப்பட்ட பட்டாசு மீது தீப்பொறி விழுந்தது. இதில் பட்டாசுகள் வெடித்து சிதறின. இந்த சம்பவத்தில் செல்வராஜ் (வயது 29), தமிழ்செல்வன் (வயது 11), கார்த்தி (வயது 11) ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே உடல்சிதறி உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# தனியார் பள்ளி ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்

## கல்வித்துறை இயக்குனரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சிவா கோரிக்கை



புதுச்சேரி, ஏப். 26-

கல்வித்துறையின் மெத்தனப் போக்கினை கண்டித்து தனியார் பள்ளி ஊழியர்களின் சங்கங்களின் சம்மேளனம் சார்பாக கடந்த இரண்டு மாதங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தி கல்வித்துறை அமைச்சர், கல்வித்துறை செயலர் மற்றும் கல்வித்துறை இயக்குனர் ஆகியோருக்கு கடிதங்கள் வாயிலாக பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தப்பட்ட நிலையில் பணி நிரந்தர கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காத காரணத்தால், பொதுக்குழுவில் எடுத்த முடிவின்படி கல்வித்துறை வளாகத்தில் 5வது நாளாக நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்திற்கு தனியார் பள்ளி சங்கங்களின் சம்மேளன பொதுச் செயலாளர் கிறிஸ்டோபர் தலைமை வகித்தார். தலைவர் வின்சென்ட் ராஜ் முன்னிலை வகித்தார்.

இப்போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் போராட்டக்களத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சிவா, நேற்று வந்திருந்து பணி நிரந்தர கோரிக்கைக்காக போராடும் ஆசிரியர், ஊழியர்களுக்கு ஆதரவளித்து பேசினார்.

மேலும், கல்வித்துறை இயக்குனரை சந்தித்து, புதுவை அரசு உதவி பெறும் பள்ளி பள்ளி ஆசிரியர்களின் பணி நிரந்தர கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகோள் விடுத்தார். இதுகுறித்து முடிவெடுக்க இரண்டு, மூன்று நாள் அவகாசம் தேவை என இயக்குனரும், எதிர்க்கட்சித் தலைவரிடம் கூறினார்.

இதனை அடுத்து சங்கநிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்த பின் அடுத்த கட்டமாக இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு இயக்குனரை சந்திக்கலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சிவா உறுதியளித்து சென்றார்.

இந்த சூழ்நிலையில் பணி நிரந்தர கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று தனியார் பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் 70க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், ஊழியர்களும், பல்வேறு அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில்இருந்தும் கலந்துகொண்டனர்.

இந்த 5ம் நாள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் அரசு ஊழியர் சங்கங்களின் சம்மேளன தலைவர்களும், நிர்வாகிகளும், இணைப்பு சங்கங்களின் தோழர்களும், தலைவர்களும் கலந்துகொண்டனர்.

# பொது சுகாதார துறை ஆய்வு கூட்டம்



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பொது சுகாதார துறையின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

# மாமதுரையர் இயக்க நிர்வாகக் குழுக் கூட்டம்



மதுரை, ஏப். 26-

அகில உலகத் தலைவர் முனைவர் க. திருமுருகன் தலைமையில், "மாமதுரையர்" இயக்கத்தின் முதன்மை நிர்வாகக் குழுக் கூட்டம் மதுரையில் உள்ள "டெம்பிள் சிட்டி டிராம்ஸ் இன்" மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இயக்கத்தின் அடிப்படை கொள்கைகள், நிர்வாகத் திட்டங்கள் மற்றும் பிராந்திய வளர்ச்சிக்கான பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1.ஐந்தாம் தமிழ் சங்கம் உருவாக்கப்பட்டமை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

2.இயக்கத்தின் பெயராக "மாமதுரையர் (அகில உலக அமைப்பு)" என உறுதி செய்யப்பட்டது.

3.இயக்கத்தின் சின்னவாசகமாக:

"ஊருக்காக இணைவோம் உலகம் உய்ய உழைப்போம்" என ஒப்புமை பெறப்பட்டது.

4.லோகோ அனைத்துப் பகுதிகளிலும் ஒப்புதல் பெற்ற நிலையில், அமைப்புரிமை (IP) பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.தமிழகத்தின் இரண்டாம் தலைநகராக மாமதுரையை அறிவிக்க, மாநில அரசிடம் அதிகாரபூர்வ வலியுறுத்தல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

6.வைகை நதியின் நிலையை மீட்டெடுக்கும் வகையில், பசுமை பராமரிப்பு, நீர்த்தேக்கம், குடிநீர் சுத்திகரிப்பு போன்ற திட்டங்கள் குறித்து முன்முயற்சி மேற்கொள்ளப்படும்.

7.மாமதுரையைச் சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட சுற்றுலா தளங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கப்படும்.

8.இயக்கத்தின் நெறிமுறைகளின்படி, முன்னறிவிப்பின்றி உறுப்பினரை நீக்க நிர்வாகத்துக்கு உரிமை உண்டு. உறுப்பினர் சந்தா திருப்பித் தரப்படாது.

9.அனைத்து துறை அதிகாரிகளுக்கும் அதிகாரபூர்வ கடிதங்கள் அனுப்பி பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

10.முதல் கட்டமாக 11 நிர்வாகக் குழு (EC) உறுப்பினர்கள் நியமிக்கப் படுவர். மேலும் 2 ரிசர்வ் உறுப்பினர்கள் இடைநிலைப்படுத்தப் படுவர்.

11.மாவட்டங்களிலிருந்து குறைந்தபட்சம் 50 ஆயுட்கால சந்தா பெறப்படும் சந்தா எண்ணிக்கையை அடைந்த பிறகு, மாவட்ட செயலாளர்கள் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

12.வேறு மாநிலங்களில், உயரிய பதவியில் பணியாற்றி ஓய்வு பெற்ற நபர்களை இயக்கத்தில் இணைத்து, ஆலோசகர் மற்றும் வழிகாட்டி குழுவாக செயல்படுத்த திட்டமிடப்பட்டது.

13.ஒவ்வொரு மாதமும் மூன்றாம் செவ்வாய்க்கிழமை நிர்வாகக் குழுவும் பொதுக் குழுவும் இணைந்து கலந்தாய்வு கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

14.உறுப்பினர் சேர்க்கையை ஊக்குவிக்கும் நோக்கில், கலை உலக நட்சத்திரங்கள் பங்கேற்கும் சிறப்பான நிகழ்வு ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# ஓய்வூதியோர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தென்காசி, ஏப். 26-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓய்வூதியோர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் சென்னை ஓய்வூதிய இயக்குநரக கூடுதல் இயக்குநர் (மின் ஆளுமை) டாக்டர்.அ.நிருபா ராணி, கணக்கு அலுவலர் கு.அருள் மற்றும் கருவூல கணக்கு இயக்குநரக (ஓய்வூதிய பிரிவு) கண்காணிப்பாளர் வீ.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 15 முன்னோடி மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விபரம் ஓய்வூதியதார்களுக்கு நேரிடையாக தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஒரு மனு புதிதாக பெறப்பட்டு மேல்நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டத்தில், சென்னை மாநிலக் கணக்காயர் அலுவலக, துணை மாநில கணக்காயர் விஜயா, முதுநிலை கணக்கு அலுவலர் குப்புசாமி, முதுநிலை கணக்கர் வி.கோகுல கிருஷ்ணன், உதவி கணக்கு அலுவலர்கள் ஸ்ரீப்ரியா, நிர்மலா மற்றும் மணிகண்டன் தென்காசி மாவட்ட கருவூல அலுவலர் தவமணி ஆரோக்கியராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) அ.எபனேசர் மற்றும் மாவட்ட அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் கலந்துகொண்டனர்.

# சுகாதாரத்துறை செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம்



கடலூர், ஏப். 26-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சுகாதாரத் துறையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் ஆரோக்கியமாகவும், சுகாதாரத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்கில் கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 உள்ளிட்ட பல்வேறு சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் வாயிலாக 45 வயதுக்கு மேற்பட்ட இரத்த அழுத்தம், நீரிழிவு உள்ளிட்ட பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு சரிவர மருத்துவ வசதிகள் வழங்கப்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 7 நகர்ப்புற சுகாதார நிலையங்கள், 319 துணை சுகாதார நிலையங்கள், 10 வட்டார மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் 457 மருத்துவர்கள், 13 இராணுவ மருத்துவ அதிகாரிகள். 26 தேசிய குழந்தைகள் நல திட்டக்குழுவினர் பணிபுரிகின்றனர். இந்நிலையங்களில் மொத்தமாக 900 படுக்கை வசதிகளுடன், நாளொன்றுக்கு 24,134 புற நோயாளிகள் மற்றும் 8,381 உள்நோயாளிகள் சிகிச்சைபெறும் வசதிகளுடனும், மாதந்தோறும் 1.081 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு சிகிச்சையும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் நிகழ்ந்த மகப்பேறு இறப்பு அறிக்கையின் அடிப்படையில் தற்போது மகப்பேறு இறப்பு நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ளப் பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும், சிறுவயது கர்ப்பத்தினை தடுக்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு இரத்த சோகை பரிசோதனை மேற்கொண்டு. அவர்களின் ஆரோக்கியம் மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கவும், மகப்பேறு நலன் குறித்து தாய்மார்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சுகாதாரத் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர், மருத்துவம் நலப்பணிகள் (பொ.) குமார், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் திருப்பதி. துணை இயக்குநர்கள் பொற்கொடி, சித்திரை செல்வி, கருணாகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டும் பணியை நாமக்கல் ஆட்சியர் ஆய்வு



நாமக்கல், ஏப். 26-

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், கூடச்சேரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா நெடுஞ்சாலை துறை சார்பில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பரமத்தி வேலூர் வட்டம், மாவுரெட்டி எஸ்.புதுப்பாளையம் சாலை கி.மீ. 6/4ல் (கூடச்சேரி திருமணிமுத்தாறு பாலம்) பழைய குழாய் தாம்போகி பாலம் உள்ளது. இப்பாலமானது திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது. மாவுரெட்டி எஸ்.புதுப்பாளையம் சாலையானது மாவட்ட முக்கிய சாலையாகும். மழைக்காலங்களில் குழாய் தாம்போகி பாலத்தில் வெள்ளம் கணிசமாக உயர்கிறது. இது ஒவ்வொரு வருடமும் இரண்டு அல்லது மூன்று முறை நிகழ்கிறது. எனவே, விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், (சிஆர்ஐடிபி) 2024–25 திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் பழைய குழாய் தாம்போகி பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் பணி ஒப்புதல் அளிக்கப்பட்டு, பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், பாலம் கட்டும் பணியானது 2025 ஆண்டு இறுதிக்குள் முடிவுற உள்ளது.

இதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் உமா கூடச்சேரியில் மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு பணியினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்க நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

முன்னதாக, பரமத்தி வேலூர் வட்டம், மரவபாளையம் தேசிய நெடுஞ்சாலை எண் 44 விரிவாக்க பணி நடைபெற்று வருவதையொட்டி, பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் சாலை கடந்து செல்ல மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர் திருகுணா, பரமத்தி வேலூர் வட்டாட்சியர் முத்துராமலிங்கம் ஆகியோர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தலையங்கம்

## மாலை எக்ஸ்பிரஸ்

26.4.2025 (சனிக்கிழமை)

# முயற்சி தேவை

படித்து பட்டம் பெறும் இளைஞர்கள் அனைவருக்குமே முதல் தேர்வாகவும், கனவுத்தேர்வாகவும் இருப்பது இந்த அகில இந்திய குடிமை பணிகள்தான். இதைத்தான் சிவில் சர்வீசஸ் பணி என்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இதற்கான காலிப்பணியிடங்கள் குறித்த அறிவிப்பை யு.பி.எஸ்.சி. என்று அழைக்கப்படும் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டு, முதல்நிலை, முதன்மை மற்றும் நேர்முகத்தேர்வுகளை நடத்தி அதில் தேர்வர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தகுதியானவர்களை தேர்வுசெய்து, அவர்களை சொந்த மாநிலத்திலோ, வெளி மாநிலங்களிலோ பணியாற்ற நியமனம் வழங்குகிறது.

இந்த தேர்வுக்கான பயிற்சிகளை அளிப்பதற்காக நாடு முழுவதும் ஏராளமான பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இதில் சைதை துரைசாமியின் மனிதநேய ஐ.ஏ.எஸ். கட்டணமில்லா கல்வியகம் போல சில பயிற்சி மையங்கள் இலவசமாக பயிற்சி அளித்து வருகின்றன.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் சிந்தையில் உதித்து, துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் நேரடி கண்காணிப்பில் நடந்துவரும் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் இந்த தேர்வுகளுக்காக இலவசமாக உறைவிடத்துடன்கூடிய பயிற்சி மட்டுமில்லாமல், உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு இந்த தேர்வுக்காக ஆயிரம் இளைஞர்கள் மதிப்பீட்டுத்தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்பட்டது. இவர்களில் முதல்நிலைத்தேர்வில் வெற்றி பெற்ற 276 பேர் உள்பட 559 பேருக்கு முதன்மைத்தேர்வு எழுத தலா ரூ.25 ஆயிரம் உதவித்தொகை அரசால் வழங்கப்பட்டது. அவர்களில் 134 பேர் முதன்மைத்தேர்வில் தேர்ச்சி பெற்று நேர்முகத்தேர்வில் கலந்துகொண்டனர்.

இப்போது இந்த தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் அகில இந்திய அளவில் மொத்தம் 1,009 பேர் தேர்வு செய்யப்பட்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் தமிழ்நாட்டில் இருந்து 57 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களில் 50 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்கள். அதாவது, '18 பேர் உறைவிட பயிற்சியும், மீதி 32 பேர் உதவித்தொகையும் பெற்று தேர்வுக்கு தயாரானார்கள்' என்று நான் முதல்வன் போட்டிப்பிரிவு சிறப்புத்திட்ட இயக்குனர் சுதாகரன் தெரிவித்துள்ளார். இது ஒருபுறம் மகிழ்ச்சியென்றாலும், 2014ம் ஆண்டு நடந்த தேர்வில் தமிழ்நாட்டில் இருந்து 119 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை ஒப்பிடும்போது, நாம் போகவேண்டிய தூரம், எடுக்கவேண்டிய முயற்சி இன்னும் நிறைய இருக்கிறது என்பது புலனாகிறது.

இந்த ஆண்டு நடந்த தேர்வு இன்றைய இளைஞர்களுக்கு 'முயற்சி திருவினையாக்கும்' என்ற பாடத்தையும் கற்பித்து கொடுத்திருக்கிறது. அகில இந்திய அளவில் முதல் இடத்தைப் பெற்றுள்ள சக்தி துபே என்ற பெண் 5வது முயற்சியிலும், 2 மற்றும் 3வது இடத்தை முறையே பெற்ற ஹர்ஷிதா கோயல், பராக் ஆகியோர் 3வது முயற்சியிலும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதுபோல தமிழ்நாட்டில் முதல்இடத்தில் தேர்வான சிவசந்திரனும் 5வது முயற்சியில்தான் வெற்றி பெற்றுள்ளார். சாதனை படைத்த மற்றவர்களும் இதேபோல ஒன்றுக்கும் மேற்பட்ட முயற்சியில்தான் வெற்றி பெற்றுள்ளனர். எனவே சிவில் சர்வீசஸ் தேர்வுகள் எழுதி தோல்வியடைந்தால் மனம்தளராமல், சோர்வடையாமல் மீண்டும் நன்கு தயார்படுத்திக்கொண்டு தேர்வு எழுதினால் வெற்றி இலக்கை அடையமுடியும்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# தாகூர் அரசு கலை கல்லூரியில் ரூ.80 லட்சத்தில் வாசிப்பு கூடம்

## அமைச்சர் நமச்சிவாயம் துவக்கி வைப்பு



புதுச்சேரி, ஏப். 26–

புதுச்சேரி லாஸ்பேட்டை தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ. 80 லட்சம் செலவில் வாசிப்பு கூடம் கட்டும் பணியை, அமைச்சர் நமச்சிவாயம், கல்யாண சுந்தரம் எம்.எல்.ஏ., ஆகியோர் துவக்கி வைத்தனர்.

லாஸ்பேட்டை தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நூலகம் அருகே ரூ. 80 லட்சம் செலவில் புதியதாக வாசிப்பு கூடம் கட்ட முடிவு செய்யப்பட்டது. இதற்கான பூமி பூஜை நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., ஆகியோர் பங்கேற்று பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து, அமைச்சர் நமச்சிவாயம், பேராசிரியர்களுடன் கல்லூரியின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார். முன்னதாக தாகூர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் வீரசெல்வம், உயர் கல்வித்துறை இயக்குநர் அமன் சர்மா, உறுப்பினர் செயலர் அசோக், பொதுப்பணித்துறை சிறப்பு கட்டடம் செயற்பொறியாளர் ஜெலட்சுமி, கல்லூரி முதல்வர் கருப்பசாமி, ஒருங்கிணைப்பாளர் வேலுராஜ், இளநிலை பொறியாளர் அனந்த பத்மநாபன், கட்டிட ஒப்பந்ததாரர் அருணகிரி உட்பட பலர் பங்கேற்றனர்.

# அண்ணாமலை பல்கலையில் முன்னாள் மாணவர் சந்திப்பு




சிதம்பரம், ஏப். 26–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வணிகவியல் துறையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் Ph.D., ஆராய்ச்சி படிப்பை முடித்து தமிழகம் மற்றும் கேரளா பல்கலைக்கழகத் துறைகளில் துணைவேந்தர்களாக, பதிவாளராக, புல முதல்வராக, துறைத்தலைவராக, பேராசிரியராக பணியாற்றி 35 முதல் 40 ஆண்டு கால கல்விப் பணி முடித்தவர்கள் ஒன்று கூடி தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். துவக்க விழாவில் துணைவேந்தர் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் பேராசிரியர். டாக்டர் அருட்செல்வி, கலைப்புல முதன்மையர் பேராசிரியர் டாக்டர் அருள், முன்னாள் மாணவர் இயக்குனர் டாக்டர் கார்த்திகேயன் ஆகியோர் துவக்கவுரை மற்றும் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் 25 ஆண்டுகளுக்கு முன் பிஎச்.டி., பட்டம் பெற்ற பழைய மாணவர் மற்றும் சென்னை பல்கலைக்கழக பதிவாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர். அமர்சந்த் தனது சீரிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டு ஆசிரியர், மாணவர்கள் தங்களை எப்படி தூய்மையானவர்களாக ஆக்கிக்கொள்ள முடியும் என்று விளக்கி கூறினார். முன்னதாக துறைத்தலைவர் டாக்டர். பத்மநாபன் வரவேற்புரையும் ஆற்றவும் முடிவில் மேனாள் துறைத்தலைவர் டாக்டர். இளங்கோவன் நன்றியுரையும் ஆற்றினர். அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் டாக்டர் சுடலைமுத்து மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் டாக்டர் செல்வம், காந்தி கிராம பல்கலைக்கழக பேராசிரியர் பிச்சை, கேரளா வேளாண் துறை மேனாள் தலைவர் வீரகுமார், திருச்சியிலிருந்து புலமுதல்வர் டாக்டர் வி. செல்வம் மற்றும் தஞ்சை பூண்டி புஷ்பம் கல்லூரி பேராசிரியர் டாக்டர் வி. சாமிநாதன், கோவை கல்லூரி பேராசிரியர் டாக்டர் வி. சேகர், அழகப்பா பல்கலைக்கழக மேலாண்மை பேராசிரியர் டாக்டர் வி. பெருமாள் மற்றும் பேராசிரியர்கள் டாக்டர் சுப்ரமணியம், டாக்டர் ஆறுமுகம், டாக்டர் பரமேஸ்வரன் ஆகியோர் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். வணிகவியல் துறை மேனாள் தலைவர்கள் டாக்டர். கோவிந்தராஜன், டாக்டர். இளங்கோவன் ஆகியோர் தங்களை பற்றியும் தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். இறுதியாக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக புலமுதல்வர் மேனாள் துறைத் தலைவர் டாக்டர் வி. செல்வம் நன்றியுரை நவின்றார். வணிகவியல் துறைத்தலைவர் மற்றும் அனைத்து பேராசிரியர்களும் வழியனுப்பிவைக்க, 35 ஆண்டுகளுக்கும் மேலாக உயர் கல்வித் துறையில் சாதனை படைத்த வணிகவியல் பேராசிரியர்கள் நல்நினைவுகளுடன் இல்லம் திரும்பினர். எல்லோரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நன்றியோடு நினைத்து அதன் நிறுவனர்களுக்கு நன்றி கூறினார்கள்.

# புதுவை அரசு உதவியாளர் பணிக்கு நாளை எழுத்து தேர்வு

## முறைகேட்டில் ஈடுபட்டால் வழக்கு



புதுச்சேரி, ஏப். 26–

புதுச்சேரி அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள 256 உதவியாளர் பணியிடங்களுக்கான முதல் நிலை தேர்வு நாளை 27ம் தேதி காலை 10:00 மணி முதல் பகல் 12:00 மணி வரை நடக்கிறது. இத்தேர்வை 32 ஆயிரத்து 829 பேர் எழுத உள்ளனர்.

புதுவை தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி பங்கஜ்குமார் ஜா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

புதுவை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் உதவியாளர் பணிக்கு முதல் நிலைத் தேர்வு புதுவை, காரைக்கால், மாகி, ஏனாமில் நாளை 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை நடக்கிறது. இத்தேர்வை 32 ஆயிரத்து 829 பேர் எழுத உள்ளனர். நுழைவுச்சீட்டில் குறிப்பிட்டுள்ள மையத்தில் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். நுழைவுச்சிட்டில் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி கையொப்பமிட்டு எடுத்து வர வேண்டும். அத்துடன் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், பான் கார்டு ஏதேனும் ஒன்றின் அசலை கட்டாயம் கொண்டு வர வேண்டும்.

தேர்வர்களின் கைரேகை பதிவு செய்யப்பட்ட பின் தேர்வு மையத்தில் அனுமதிக்கப்படுவர். தேர்வு மைய நுழைவு வாயில் சரியாக காலை 9:30 மணிக்கு மூடப்படும். அதன் பின் வரும் தேர்வர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே, தேர்வர்கள் முன்னதாகவே மையத்துக்கு வர அறிவுறுத்தப்படுகின்றனர். கருப்பு பால்பாய்ண்ட் பேனா, நுழைவுச்சீட்டு, அசல் அடையாள அட்டை மட்டுமே தேர்வு மையத்திற்கு கொண்டுவர வேண்டும். செல்போன், கைப்பை, ப்ளூடூத் சாதனங்கள், ஹெட்போன், கால்குலேட்டர், பென்டிரைவ் போன்ற மின்னணு சாதனங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. அனைத்து தேர்வு மையங்களிலும் ஜாமர் கருவி, தேர்வு அறைகளில் சி.சி.டி.வி., கேமரா பொருத்தப்பட்டுள்ளது. நுழைவுச்சீட்டை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து மையங்களின் இருப்பிடம் அறிந்து முன்னதாகவே தேர்வுக்கு வர அறிவுறுத்தப்படுகின்றனர்.

நுழைவுச் சீட்டில் அச்சிடப்பட் டிருக்கும் அறிவுறுத்தல்கள், பிற விபரங்களை பின்பற்ற வேண்டும். தேர்வின்போது முறையற்ற வழிகளை பின்பற்றுவது கண்டறியப்பட்டால், எப்.ஐ.ஆர்., பதிவு செய்தல், எதிர்கால தேர்வுகளில் இருந்து தடை உட்பட கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தேர்வை வெளிப்படை தன்மையுடனும், நேர்மையாகவும் நடத்த அரசு உறுதியாக உள்ளது. இது தொடர்பாக விவரங்கள் தேவைப்பட்டால் அலுவலக நேரத்தில் 0413–2233338 என்ற எண்ணில் இன்று 26ம் தேதி வரை தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி பங்கஜ்குமார் ஜா தெரிவித்துள்ளார்.

# தூய்மைப்படுத்தும் பணிகளை ஆட்சியர் ஆய்வு



திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கால்வாய் குறிச்சி பகுதியில் அரவிந்த் கண் மருத்துவமனையின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

# விமான நிலையத்தில் ஒத்திகை நிகழ்ச்சி



தூத்துக்குடி விமான நிலையத்தில் விமானம் கடத்தப்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது. அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான்.

# சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ள நிலத்தில் ஆட்சியர் ஆய்வு



சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், இராமசேஷபுரம் கிராமத்தில் வேளாண்மை துறையின் மூலம் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ள நிலத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தா தேவி ஆய்வு மேற்கொண்டார். உடன் தோட்டக்கலை துணை இயக்குனர் மஞ்சுளா.

# போக்குவரத்து விதிகளை பின்பற்றும் பொதுமக்களுக்கு ஹெல்மெட்



விழுப்புரம், ஏப். 26-

விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுறுத்துதலின் பேரில் விழுப்புரம் போக்குவரத்து காவல்துறை, இந்திய மருத்துவ சங்கம் வாசுகி ஹண்டா சரோஜினி டிரஸ்ட் இணைந்து வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிவதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர்கள் குமாரராஜா, விஜயரங்கன், தலைமையில் தலைக்கவசம் அணிந்தும், சீட் பெல்ட் அணிந்தும், சாலை போக்குவரத்து விதிகளை முறையாக பின்பற்றி பயணித்த வாகன ஓட்டிகளுக்கு இலவசமாக 'தலைக்கவசங்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். நிகழ்ச்சியில் மருத்துவர் திருமாவளவன் சரோஜினி டிரஸ்ட் அருள்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் ஆட்சியருடன் நிலநடுக்கவியல் அறிவியலாளர்கள் ஆலோசனை



திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகப்படியான திடீர் வெடிச்சத்தம் ஏற்படுவதற்கான உரிய காரணங்களை தேசிய நிலநடுக்கவியல் மையத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் அதிர்வுகள் அடிக்கடி உணரப்படும் இடங்களில் கள ஆய்வு மேற்கொண்டு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணனுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.

# போப் ஆண்டவர் மறைவுக்கு சத்தியமங்கலம் இறைமக்கள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி



செஞ்சி, ஏப். 26-

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சத்தியமங்கலத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் ஆண்டவர் பிரான்சிஸ் அவர்கள் கடந்த 2025 ஏப்ரல் 21ஆம் தேதி, 88வது வயதில் வாடிகனில் காலமானார். மூளைப்பக்கவாதம் மற்றும் இருதய செயலிழப்பால் அவர் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த துயரச் செய்தியைத் தொடர்ந்து, உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்கர்கள் அவருக்கான இறைஅஞ்சலியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தியாவிலும் பல தேவாலயங்களில் மணி ஒலிக்கப்பட்டு, பிரார்த்தனைகள் நடைபெற்றன. தமிழ்நாடு அரசு மூன்று நாள் அரசு துக்கத்தை அறிவித்து, சட்டசபையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது.

இந்நிலையில், சத்தியமங்கலம் புனித அந்தோனியார் ஆலயத்தில், போப்பின் மறைவினை நினைவுகூறும் நிகழ்ச்சி நடைபெற்று, பங்குத்தந்தை எ.சிரில் தலைமையில் மௌன ஊர்வலம் நடத்தப்பட்டது. சத்தியமங்கலம் கூட்ரோட்டிலிருந்து ஆலயம் வரை, பங்கு இறைமக்கள் போப்பின் புகைப்படம் மற்றும் மெழுகுவர்த்திகள் ஏந்தி எளிமையான முறையில் மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

போப்பின் இறுதிச்சடங்கு, அவரது விருப்பப்படி, வாடிகனில் உள்ள புனித மரியா மேஜர் பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

## காஷ்மீரில் நடந்த துப்பாக்கி சூட்டில்

# உயிரை கையில் பிடித்தபடி 3 கிலோமீட்டர் ஓடி வந்த செஞ்சி சுற்றுலா பயணிகள் சொந்த ஊர் திரும்பினர்



செஞ்சி, ஏப். 26-

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காம் மாவட்டத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 27 பேர் பரிதாபமாக சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்போது செஞ்சியில் இருந்து காஷ்மீருக்கு சுற்றுலா சென்றவர்கள் துப்பாக்கி சூடு நடந்த போது அப்பகுதியில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் மலை பாதையில் தப்பி ஓடி வந்து உயிரை காப்பாற்றிய தகவல் வெளியாகி உள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகா அப்பம்பட்டு பகுதியைச் சேர்ந்தவர் சையது உஸ்மான் (45). செஞ்சி நகரைச் சேர்ந்தவர் காஜா பாஷா (55). இவர் முன்னாள் பேரூராட்சி மன்ற கவுன்சிலர். சக்கராபுரத்தைச் சேர்ந்தவர் ராஜா (44). இதேபோல் மீனம்பூரைச் சேர்ந்த சாதிக் (44). ஷபி ரகுமான் (28). ரகுமான் (42) ஆகிய ஆறு பேரும் கடந்த 19ஆம் தேதி இரவு சென்னையில் இருந்து ஜம்மு காஷ்மீருக்கு சென்றனர். மறுநாள் காலை அனந்த்நாக் சென்றனர்.

அனந்த்நாக் பகுதியில் 2 நாட்களாக பல்வேறு பகுதிகளை சுற்றிப் பார்த்த 22 ஆம் தேதி காலை அனந்த்நாக்பகுதியில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பஹல்காம் சுற்றுலா மலைப்பகுதிக்கு சென்று பல்வேறு இடங்களை சுற்றி பார்த்தனர் தொடர்ந்து அங்கு உள்ள மலை அடிவாரத்தில் இருந்து குதிரை மூலம் பல்வேறு சுற்றுலாத்தலத்திற்கு சென்றனர். அந்தப் பகுதியை சுற்றி பார்த்துவிட்டு மதியம் மீண்டும் குதிரை ஏறும் இடத்துக்கு வந்தனர் அப்போது துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டுள்ளது. முதலில் ஏதோ பட்டாசு வெடிப்பதாக அவர்கள் எண்ணி உள்ளனர். ஆனால் அங்கிருந்த குதிரைக்காரர்கள் துப்பாக்கி சூடு நடக்கிறது. உயிர்ப் பிணிக்க வேண்டுமானால் நீங்கள் அனைவரும் இங்கிருந்து தப்பி விடுங்கள் என கூறியுள்ளனர்.

மிக அருகில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் செஞ்சியை சேர்ந்த ஆறு சுற்றுலாப் பயணிகளும் சேரும் சகதியுமான கரடு முரடான இருந்த பாதையில் உயிரை கையில் பிடித்தபடி சுமார் 3கிலோ மீட்டர் தூரம் ஓடிவந்து மலையில் இருந்து கீழே வந்தனர். பின்னர் அங்கிருந்து அனந்த்நாக் நகரத்திற்கு வந்துள்ளனர்.

இதுகுறித்து செஞ்சியை சேர்ந்த சையது உஸ்மான் கூறுகையில், சுற்றுலா தளத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இருந்தனர். துப்பாக்கி சூடு நடந்த போது அதே இடத்திற்கும் மிக அருகில் நாங்கள் அனைவரும் இருந்தோம் பெரும்பான்மையான சுற்றுலாப் பயணிகள் துப்பாக்கி சூடு நடப்பது அறியாமல் சுற்றுலா இடத்தை ரசித்து கொண்டு இருந்தனர். 10 நிமிடம் முன் தாக்குதல் நடந்து இருந்தால் நாங்களும் துப்பாக்கி சூட்டில் சிக்கி இருந்திருப்போம் தாக்குதல் நடந்தபோது போலீசாரும் ராணுவத்தினரும் அங்கு இல்லை மலையிலிருந்து கீழே இறங்கும்போது எதிரே போலீசரும் ராணுவத்தினரும் அப்பகுதிக்கு சென்றனர்.

நாங்கள் அடுத்த 1மணி நேரத்தில் அனந்த்நாக் வந்துவிட்டோம். பிறகு அங்கிருந்து தமிழக அரசின் உதவி எண்ணுக்கு போன் செய்தோம். 4 மணி நேரத்தில் தமிழக அரசின் ஐஏஎஸ் அதிகாரி அஸ்தாப் நாங்கள் தங்கி இருந்த ஓட்டலுக்கு வந்தார். அவர் ஸ்ரீநகர் சாலையில் பிரச்சனை எதுவும் இல்லை. நீங்கள் ஸ்ரீநகர் சென்று உடனடியாக டெல்லிக்கு செல்லலாம் என கூறினார். எந்த உதவி என்றாலும் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி எங்களுக்கு தெரிவித்தார். டெல்லி வரும் வரை தமிழக அதிகாரிகள் எங்களை தொடர்பு கொண்டு பேசினார்கள். நேற்று ஸ்ரீ நகரிலிருந்து டெல்லிக்கு வந்தோம் எங்களுக்கு உணவு கொடுத்து தங்க வைத்தனர். மாலை டெல்லியில் இருந்து புறப்பட்டு விமான மூலம் நேற்று இரவு சென்னை வந்து சேர்ந்தோம். சென்னையிலிருந்து தமிழக அரசின் சார்பில் எங்களை அனைவரையும் செஞ்சிக்கு அனுப்பி வைத்தனர் நாங்கள் அனைவரும் செஞ்சிக்கு நல்லபடியாக வீடு வந்து சேர்ந்தோம் என சையத் உஸ்மான் தெரிவித்தார். மேலும் நாங்கள் நல்லபடியாக வீடு வந்து சேர்ந்ததற்கு உதவிய தமிழ்நாடு முதலமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.

# ஆரோக்கியமான சிற்றுண்டிக்கு ஆலோசனை வழங்கும் நடிகை வாணி போஜன்



கோவை, ஏப். 26-

இன்றைய பரபரப்பான வாழ்க்கை சூழலில் ஆரோக்கியமான உணவுகளை நாம் கண்டறிவது என்பது மிகுந்த சவாலான ஒன்றாக உள்ளது. நாம் சாப்பிடும் பெரும்பாலான உணவுகள் அதன் ருசியின் காரணமாக நம்மை அதிகம் சாப்பிடத் தூண்டும். அவை நமது உடலுக்கு ஆரோக்கியம் தருமா? அல்லது தீங்கு விளைவிக்குமா? என்பது தெரியாமல் அவற்றை நாம் சாப்பிடுகிறோம். இந்த நிலையில் நடிகை வாணி போஜன், தனது உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். மேலும் அவர் உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவுகளை மட்டுமே எடுத்துக் கொள்கிறார். சமச்சீரான உணவுடன், பாதாம், தயிர், பருவகால பழங்கள் போன்ற சிற்றுண்டிகளையும் சாப்பிடும் அவர், உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்துவிடுகிறார். இந்த கட்டுரையின் மூலம் தனது ஆரோக்கியம் குறித்தும் பட ஷூட்டிங்கின்போது மற்றும் நாள் முழுவதும் தான் சுறுசுறுப்பாகவும் இருப்பதன் ரகசியம் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார். ஒரு கைப்பிடி பாதாம் ஒரு சிறந்த சிற்றுண்டியாக இருக்கும், இது உடல் ஆற்றலை அதிகரிக்கச் செய்வதோடு 3 வேளை உணவுக்கு இடையில் பசியைக் கட்டுப்படுத்த உதவுகிறது. ஆரோக்கியமான கொழுப்புகள், புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த பாதாம், இதய ஆரோக்கியத்தை பராமரிப்பதோடு, எடை மேலாண்மை மற்றும் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது. அதை நாம் எந்த வகையில் அதாவது உடைத்தோ அல்லது தூளாக ஸ்மூத்திகள், பேக்கரி பொருட்களில் சேர்த்தோ அல்லது அப்படியே சாப்பிட்டாலும் அது முழுப் பலனையும் தருகிறது. கிரேக்க தயிர், அதிக புரதம் மற்றும் புரோபயாடிக் நிறைந்த உணவாகும். கிரேக்க தயிருடன், பெர்ரி, ஆப்பிள் அல்லது வாழைப்பழம் போன்ற பழங்களையும், பாசிப்பருப்பு மாவிலிருந்து தயாரிக்கப்படும் மூங் தால் சில்லா, அல்லது சுவையான பான்கேக்குகள், சத்தான மாலை அல்லது காலை சிற்றுண்டிக்கு சிறந்த உணவாகும். ஊறவைத்த பாசிப்பருப்பை மென்மையான மாவில் கலந்து, கீரை, கேரட் மற்றும் வெங்காயம் போன்றவற்றை சேர்த்து சாப்பிடலாம். குறைந்த எண்ணெயைப் பயன்படுத்தி, நான்ஸ்டிக் பாத்திரத்தில் இதை செய்ய வேண்டும். இந்த பான்கேக்குகள் புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்தவையாகும். இரவு நேர ஓட்ஸ் என்பது சத்தான மற்றும் பல்துறை திறன் கொண்ட ஒரு சரியான சிற்றுண்டியாகும். காலையில், எழுந்தவுடன் அதன் மீது வறுத்த பாதாம், விதைகள் அல்லது பருவகால பழங்களை சேர்த்து காலை உணவாக சாப்பிடவும். கொண்டக்கடலையை மொறுமொறுப்பாக வறுத்து, சிறிது உப்பு, மஞ்சள் அல்லது மிளகாய் தூள் சேர்த்து தாளிக்கவும். இதில் புரதம் மற்றும் நார்ச்சத்து அதிகமாக உள்ளது, இது மாலை நேர உணவிற்கு சிறந்த சிற்றுண்டியாக இருக்கும். இந்த சிற்றுண்டிகள், நமது பாரம்பரிய சுவை மாறாமல் பல்வேறு நன்மைகளை வழங்குகின்றன. இவை நமது உடலுக்கு சிறந்த ஆரோக்கியத்தை தருவதோடு சுவைமிகுந்த சிற்றுண்டியாகவும் இருக்கும் என்று வாணி போஜன் தெரிவித்துள்ளார்.

காரைக்கால் தருமபுரம் புனித செபஸ்தியார் ஆலயத்தில்

# 151வது ஆண்டு திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



காரைக்கால், ஏப். 26–

காரைக்கால் தருமபுரம் புனித செபஸ்தியார் ஆலயத்தில், நேற்று இரவு 151 வது ஆண்டுத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. கொடியேற்ற விழாவில், திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

காரைக்கால் திருநள்ளாறு வீதியில் உள்ள தருமபுரத்தில், 151 ஆண்டு பழமையான புனித செபஸ்தியார் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் 10 நாட்கள் ஆண்டுத்திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு 151வது ஆண்டுத்திருவிழா நேற்று இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக, கொடிமரத்தில் ஏற்றப்படும் கொடியை, ஆலய பங்குத்தந்தை பால்ராஜ் குமார் மந்திரித்தார். தொடர்ந்து, கொடி முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டது. ஊர்வலம் மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தவுடன், காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலைய பங்குத்தந்தை பி.பால்ராஜ் குமார் தலைமையில் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில், புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி முதல்வர் பீட்டர் பால்ராஜ் மற்றும் பங்குத்தந்தையர்கள் அருள் பணி சாமிநாதன் செல்வம், அருள் பணி பன்னீர் ராசா. அருள் பணி தோமினிக் மற்றும் சிறப்பு மறையுறை தந்தை அருள் பணி இயேசு நசரேன் மற்றும் அருள் சகோதரிகள், திரளான பங்கு மக்கள் கலந்துகொண்டனர். விழா முடியும் வரை, தினசரி மாலை சிறிய தேர்பவனியும், திருப்பலியும் நடைபெறும். விழாவின் முக்கிய நிகழ்சியாக, மே 2ந் தேதி இரவு, 3 பெரிய தேர்பவனியும், மே 3ந் தேதி இரவு, சிறப்பு திருப்பலி நடத்தப்பட்டு 5 தேர்பவனியும் நடைபெறவுள்ளது. மே 4 ந் தேதி காலை கொடியிறக்கம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

# காரைக்காலில் அமைதி ஊர்வலம்




காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட, இந்தியர்களுக்காக காரைக்கால் மாவட்ட இந்து முன்னணி சார்பில் அதன் நகர தலைவர் ராஜ்குமார் தலைமையில் காரைக்கால் பாரதியார் வீதியில் அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டது.

# Parliamentary Committee on Estimates meeting at Kolkata




Shri. Ve Vaithilingam, MP Lok Sabha, Puducherry being a Member of Parliamentary committee on Estimates has participated in the discussion with the representatives of Ministry of Road Transport and Highways, NHAI,NHIDCL, Kolkata Port Trust, and State Government of West Bengal in connection with the examination of the subject "Development of National Highways in India" with special reference to future connectivity of landlocked state of Eastern India by expressway with ports. at Kolkata under the chairmanship of Shri.Sanjay Jaiswal.

# மேல்மலையனூரில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்டுவதற்கு பணி ஆணை

## ஒன்றிய குழு தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் வழங்கினார்



செஞ்சி, ஏப். 26–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், தலைமை தாங்கினார். மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன், முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய்சங்கர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் கலந்து கொண்டு மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு 1 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அலுவலக பணியாளர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

கன்னியாகுமரி, ஏப். 26–

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் நீண்ட காலம் நிலுவையிலுள்ள மானிய மண்ணெண்ணெய் விண்ணப்பித்து காத்திருப்பில் உள்ள பயனாளிகளுக்கு விரைவில் மானிய மண்ணெண்ணெய் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சிங்காரவேலர் குடியிருப்பு வீடுகளுக்கு விரைவில் பட்டா வழங்கப்பட வேண்டும் எனவும், மணக்குடி மீனவ கிராமத்தில் அமைந்திருக்கும் விளையாட்டு மைதானத்திற்கு மின்விளக்கு அமைத்து தரக்கேட்டும், கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர்களுக்கு விரைவில் இறப்பு சான்று வழங்கிட கேட்டும், விபத்து மூலம் இறக்கும் மீனவர்களுக்கு மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் விரைவில் இழப்பீட்டு தொகை வழங்கிட கேட்டும், மீனவ கிராமங்களில் அதிகரித்து வரும் தெருநாய்களை கட்டுப்படுத்திட கேட்டும், இயக்கத்தில் இருந்த முட்டம் திறப்பரப்பு பேருந்து சேவையினை அதே வழிதடத்தில் மீண்டும் இயக்கிட கேட்டும், கடற்கரை கிராமங்களில் உள்ளாட்சி வார்டுகளை ஒழுங்குபடுத்தவும் வாக்காளார் எண்ணிக்கையை முறைப்படுத்திடவும், தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு 60 வயது மேற்பட்டோருக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்கிட கேட்டும், தேங்கய்ப்பட்டினம் மீன்பிடித்துறைமுக ஏலகூடத்தில் அனுமதியின்றி நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களையும் மீன்பெட்டிகளையும் மாற்றி அமைத்து தர கேட்டும், மிடாலம் மற்றும் இனையம் மீனவ கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நேர்கல் சுவரினை சீரமைத்திட கேட்டும், மிடாலம் மற்றும் மேல்மிடாலம் மீனவ கிராமத்திலுள்ள சுனாமி வீடுகளுக்கு பட்டா வழங்கிட கேட்டும், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவ மனையில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைத்திட கேட்டும், தடை செய்யப்பட்ட இனையம் திருவனந்தபுரம் வழித்தட பேருந்தினை மீண்டும் இயக்கிட கேட்டும். வட்டார போக்குவரத்து அலுவலர் அனுமதியில்லாமல் இயங்கும் பள்ளி கல்லூரி வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டிட கேட்டும். கடலோர கிராமங்களில் உள்ள ஆலயங்களுக்கு சொந்தமான நிலங்களை பத்திர பதிவு செய்திட ஏதுவாக தடையை நீக்கிட கேட்டும், பூத்துறை கடற்கரை கிராமத்தில் பழுதடைந்துள்ள அலைதடுப்பு சுவரினை சீரமைத்து தரக்கேட்டும், நீரோடி இரையுமன்துறை இடப்பாடு சாலை சீரமைப்பு பணியினை விரைந்து முடித்திட கேட்டும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) கன்னியாகுமரி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களால் பதில் விவரம் தெரிவிக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் நீண்ட காலம் நிலுவையிலுள்ள மானிய மண்ணெண்ணெய் விண்ணபித்து காத்திருப்பில் உள்ள 80 பயனாளிகளுக்கு மானிய மண்ணெண்ணெய் வழங்கிட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது எனவும், சிங்காரவேலர் வீட்டுக்குடியிருப்பு திட்டத்தில், அகஸ்தீஸ்வரம் வட்டம், அழிக்கால் மீனவ கிராமத்தில் விடுபட்டுள்ள 13 குடியிருப்புகளுக்கு விரைவில் இ பட்டா வழங்கிட நடவடிக்கையில் உள்ளது எனவும், மணக்குடி மீனவ கிராமத்தில் அமைந்திருக்கும் விளையாட்டு மைதானத்திற்கு மின்விளக்கு அமைத்து தர களஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் பதில் விவரம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இருப்பின், காவல் ஆய்வாளாரின் இறுதி அறிக்கை பெற்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, இறப்பு சான்றிதழ் பெற்றிடும் நடைமுறை செயல்பாட்டில் உள்ளது எனவும், விபத்து மூலம் இறக்கும் மீனவர்களுக்கு மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு தொகை பெற, நிலுவையிலுள்ள ஆவணங்களை பெற்று வழங்கிடும் நேர்வில் இழப்பீட்டு தொகையினை விரைவில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மீனவ கிராமங்களில் அதிகரித்து வரும் தெருநாய்களை கட்டுப்படுத்திட பேரூராட்சி மற்றும் ஊராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், முட்டம் திறப்பரப்பு வழித்தட பேருந்து சேவையினை அதே வழித்தடத்தில் கடற்கரை கிராமங்களில், மகளிர் விடியல் பயணமாக செயல்படுத்திட உள்ள சாத்தியகூறுகளை ஆய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பதில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து உள்ளாட்சி தேர்தல் துவங்கும் ஒருவருட காலம் முன்பு மறுசீரமைப்பிற்கு பின்னர் உள்ளாட்சி வார்டுகளை ஒழுங்குப்படுத்தவும் வாக்காளார் எண்ணிக்கையை முறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், 60 வயது மேற்பட்டோருக்கு வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும் ஓய்வூதிய திட்டத்தினை மீனவர்களுக்கு வழங்கிட உரிய விண்ணப்பங்களை பெற்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தேங்காப்பட்டினம் மீன்பிடித்துறைமுக ஏலகூடத்தில் அனுமதியின்றி நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களையும் மீன்பெட்டிகளையும் மாற்று இடத்தில் மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எனவும் பதில் விவரம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மிடாலம் மற்றும் இனையம் மீனவ கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள நேர்கல் சுவரினை சீரமைத்திட கருத்துரு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வேண்டி அரசிற்கு சமர்ப்பித்து நடவடிக்கையில் உள்ளது எனவும், மிடாலம் மற்றும் மேல்மிடாலம் மீனவ கிராமத்திலுள்ள சுனாமி வீடுகளுக்கு பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைத்திட றிவியிக்ஷிரி திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் வாயிலாக அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், இனையம் திருவனந்தபுரம் வழித்தட பேருந்து களியக்காவிளை மார்க்கத்தில் இயக்கப்பட்டு வருகிறது எனவும், வட்டார போக்குவரத்து அலுவலர் அனுமதியில்லாமல் இயங்கும் பள்ளி கல்லூரி வாகனங்கள் கண்டறியப்பட்டு அதன்மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், கடலோர கிராமங்களில் உள்ள ஆலயங்களுக்கு செந்தமான நிலங்களை பத்திர பதிவு செய்திட வருவாய்த்துறை மூலம் தகுந்த நடவடிக்கை கேமற்கொள்ளப்படும் எனவும், பூத்துறை கடற்கரை கிராமத்தில் பழுதடைந்துள்ள அலைதடுப்பு சுவரினை சீரமைத்திட துறைமுக மேலாண்மை குழுவின் நிதியிலிருந்து செயல்படுத்திட உள்ள சாத்தியகூறுகளை ஆய்திடவும், நீரோடி இரையுமன்துறை இடப்பாடு சாலைப் சீரமைப்புபணியினை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பதில் விபரம் தெரிவிக்கப்பட்டது.

நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) சின்னகுப்பன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்கள் நாகர்கோவில் (இ) குளச்சல், குளச்சல் (இ) தேங்காய்பட்டணம், கன்னியாகுமரி (இ) சின்னமுட்டம். துணை காவல் கண்காணிப்பாளர், மாவட்ட சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை செயற்பொறியாளர் பாரதி, செயற்பொறியாளர், மீன்பிடி துறைமுக திட்ட கோட்டம், பிறதுறை அலுவலர்கள் மற்றும் மீனவ பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• சனி • ஏப்ரல் 26, 2025

# அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெறும் மணவெளி தொகுதி அரசு பள்ளி மாணவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பரிசு: சபாநாயகர் செல்வம் அறிவிப்பு




**புதுச்சேரி, ஏப். 26–**

புதுச்சேரி மணவெளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நோணாங்குப்பம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு போட்டி பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது.

தமிழ் விரிவுரையாளர் பூங்குழலி வரவேற்புரையாற்றினார். உடற்கல்வி ஆசிரியர் வாசன் நோக்க உரையாற்றினார். பள்ளி துணை முதல்வர் கல்யாணி தலைமை உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சபாநாயகர் செல்வம் கலந்து கொண்டு, தேசிய மற்றும் மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கும், பள்ளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகளையும், சான்றிதழ்களை யும் வழங்கி பாராட்டினார்.

சபாநாயகர் செல்வம் மாணவர்களிடையே உரையாற்றும்போது கூறியதாவது, மணவெளி சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இந்த தொகுதியில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் அனைத்து பள்ளிகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாத வகையில் நடவடிக்கை எடுத்துள்ளேன். சிறந்த ஆசிரியர்களை பெற்றுள்ள அரசு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளாகிய நீங்கள் உங்களுடைய கல்வியில் கவனத்தை செலுத்தி, பள்ளி பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற வேண்டும்.

அவ்வாறு இந்த ஆண்டு நடைபெற்ற 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீத தேர்ச்சி பெறும் மணவெளி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த அரசு பள்ளிகளில் தேர்ச்சி பெறும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் தலா ரூ.10 ஆயிரம் ஊக்கத்தொகையாக எனது சொந்த நிதியிலிருந்து வழங்குவேன்.

மாணவர்கள், ஆசிரியர்கள் போதிக்கின்ற கல்வியோடு ஒழுக்கத்தையும் கற்று நல்வழியில் முன்னேற வேண்டும். வருங்காலத்தில் நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறும்போது அந்த பெருமை நீங்கள் பயின்ற பள்ளிகளுக்கும், உங்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் சேரும்.

நான் பள்ளியில் கல்வி கற்கும் போது எனக்கு போதித்த ஆசிரியர்கள் நான் நன்றாக படிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் என்னை அடித்ததை கூட நான் தற்போது பெருமையாக கருதுகிறேன். இன்று நான் சபாநாயகராக உயர்ந்துள்ள நிலையில் எனக்கு கல்வி கற்றுத் தந்த ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். என் வாழ்வின் வெற்றிக்கும், உயர்வுக்கும் காரணம் எனது ஆசிரியர்கள் தான் என்பதில் எனக்கு பெருமை.

புதுவை அரசு, அரசு பள்ளி மாணவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கின்றோம். மாணவ செல்வங்களாகிய நீங்கள் கல்வியில் கவனம் செலுத்தி, மற்ற தீய எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முடிவில் பள்ளி தலைமையாசிரியர் விஜயலட்சுமி நன்றி கூறினார்.

# நெகிழி பயன்பாடு தவிர்க்க கோரி விழிப்புணர்வு பேரணி



**சங்கரன்கோவில், ஏப். 26–**

சங்கரன்கோவிலில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் தென்காசி மாவட்ட நிர்வாகம் சங்கரன்கோவில் நகராட்சியும் இணைந்து (நெகிழி) பிளாஸ்டிக் பயன்பாட்டை பொதுமக்கள் தவிர்க்க கோரியும் மஞ்சள் பைகளை பொதுமக்கள் பயன்படுத்த கோரியும், நகரின் சுகாதாரத்தை பேணி பாதுகாக்கும் வகையில் பொது மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி சங்கரன்கோவில் சங்கரநாராயணர் கோவில் காந்தி மண்டபம் முன்பாக இருந்து விழிப்புணர்வு பேரணி புறப்பட்டு நகரில் வியாபாரிகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சி பழைய பேருந்து நிலையம் வரை பேரணி நடைபெற்றது. பேரணிக்கு நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி தலைமையில் திருநெல்வேலி தென்காசி மாசு கட்டுப்பாடு வாரியம் இயக்குனர்கள் அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நகராட்சி கமிஷனர் சபாநாயகம், சுகாதார அலுவலர் வெங்கட்ராமன், ஆய்வாளர்கள் கருப்பசாமி, கைலாச சுந்தரம் முன்னிலையில் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் பொறுப்பாளர்கள் நகராட்சி டெங்கு விழிப்புணர்வு பணியாளர்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை நகராட்சி நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மாகேவில் 2 மினி பஸ் சேவை ரமேஷ் பரம்பத் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்




**புதுச்சேரி, ஏப். 26–**

புதுச்சேரி மாநிலம் மாகே பிராந்தியத்தில் பி.ஆர்.டி.சி., சார்பில் 4 நகர பேருந்துகள் இயக்கப்பட்டது.

இதில் 2 பேருந்துகள் பழுதாகி சில மாதங்களாக இயக்கப்படாமல் இருந்தது. மாகி மக்கள் கவர்னர், முதலமைச்சரிடம் பேருந்து வசதி செய்து தர கோரிக்கை வைத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று கவர்னர், முதலமைச்சர் ஆணைப்படி 2 மினி பேருந்துகளை இயக்க பி.ஆர்.டி.சி., மேலாண் இயக்குனர் நடவடிக்கை எடுத்தார். இந்த 2 பேருந்து சேவை தொடக்க விழாவுக்கு தொகுதி எம்.எல்.ஏ., ரமேஷ் பரம்பத் தலைமை வகித்தார். மண்டல நிர்வாக அதிகாரி சிவக்குமார் முன்னிலை வகித்தார். புதுவை சாலை போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநர், நடத்துநர் பற்றாக்குறை காரணமாக மாகே கூட்டுறவு சங்கம் மூலம் 7 ஓட்டுநர்கள், 2 நடத்துநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

# தேனி மாவட்ட கட்டிட பொறியாளர் சங்க நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா




**தேனி, ஏப். 26–**

தேனி மாவட்ட கட்டிட பொறியாளர் சங்க நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா தேனியில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. தேனி மாவட்ட கட்டிட பொறியாளர் சங்க தலைவராக பொறியாளர் செல்வின் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றார். செயலாளராக சையது பரூக் அப்துல்லா, பொருளாளராக ரவி பாரத் மற்றும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றனர். முன்னாள் மண்டல தலைவர் பொறியாளர் ரமேஷ்பாபு மற்றும் நந்தகுமார் பதவி பிரமாணம் செய்து வைத்தனர். பேசியட் முன்னாள் மாநில செயலாளர் குழந்தைவேலு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். விழாவில் சங்க உறுப்பினர்கள், கட்டிடப் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை தேனி மாவட்ட கட்டிட பொறியாளர்கள் சங்க முன்னாள் தலைவர் மோகன்ராம் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

சங்கத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:

கட்டுமான பொருள்களின் விலைவாசிகளை கட்டுப்படுத்த ஒழுங்குமுறை ஆணையம் அமைக்க வேண்டும். அத்தியாவசியமான கட்டுமான பொருள்களான சிமெண்ட் கம்பி ஜல்லி எம் சாண்ட் போன்ற பொருட்களை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். எம் சாண்ட் பி சாண்ட் ஜல்லி கற்கள் போன்றவைகள் ஒரு வருடத்தில் மூன்று முறை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது. பொறியாளர்கள் ஒப்பந்ததாரர்கள் மற்றும் வீடு கட்டுபவர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். விலையைக் குறைக்க கலெக்டரிடம் மனு கொடுப்பது என்றும் கூடிய விரைவில் தொடர் வேலை நிறுத்தம் அறிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஜல்லிக்கட்டு போட்டிகளில் கலந்துகொள்ளும்

# வீரர்கள், காளைகளின் உரிமையாளர்கள் இணையதளத்தில் பெயர்களை பதிவு செய்திட வேண்டும்

## திண்டுக்கல் ஆட்சியர் தகவல்

**திண்டுக்கல், ஏப். 26–**

திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு அறிவிக்கையின்படி, ஜல்லிக்கட்டு நடத்த தகுதி பெற்ற கிராமங்களில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளின் உரிமையாளர்கள் அதற்கான இணையதளத்தில்(https://dindigul.nic.in) தங்களது பெயர்களை பதிவு செய்திடல் வேண்டும். திண்டுக்கல் வருவாய் கோட்டம், நத்தம் வட்டம், சேத்தூர் கிராமம் உட்கடை சொறிபாறைப்பட்டி கிராமத்தில் 30.04.2025 அன்று நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும்



மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளின் உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ள விபரங்களுடன் இணையதளம்(https://dindigul.nic.in) மூலம் 27.04.2025ம் தேதி காலை 8 மணி முதல் 28.04.2025 அன்று மாலை 5 மணிக்குள் பதிவேற்றம் செய்திட வேண்டும். மேலும், ஜல்லிக்கட்டுப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள மாடுபிடி வீரர்கள் மேற்படி இணையதளத்தில் தங்களது கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், வயதிற்கான சான்றிதழ், முதலானவற்றை பதிவேற்றம் செய்திட வேண்டும். அதேபோல், மேற்படி ஜல்லிக்கட்டில் கலந்துகொள்ளும் காளைகளுக்கான பதிவுகளையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும். ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ளவுள்ள காளையின் உரிமையாளர்கள் இணையதளம் மூலம் தங்களது பெயர்களை பதிவு செய்திடல் வேண்டும்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ள காளையுடன் ஒரு உரிமையாளர் மற்றும் காளையுடன் நன்கு பழக்கமுள்ள ஒரு உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். பதிவு செய்தவர்களின் சான்றுகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் விதிகளின்படி டோக்கன் பதிவிறக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறுதேர்வு செய்யப்பட்டு, டோக்கன் பதிவிறக்கம் செய்த நபர்கள் மட்டுமே ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். மேற்கண்ட விபரங்கள் இடம் பெறாத இணையதள பதிவுகள் நிராகரிக்கப்படும். தகுதியுள்ள விண்ணப்ப தாரர்களுக்கான அனுமதிச்சீட்டு இணையதளம் மூலமாகவே அவர்களுக்கு வழங்கப்படும், என மாவட்ட தெரிவித்துள்ளார்.

# இஸ்ரோ முன்னாள் தலைவருக்கு முதல்வர் ரங்கசாமி இரங்கல்



புதுச்சேரி, ஏப். 26-

முதல்வர் ரங்கசாமி விடுத்துள்ள இரங்கல் செய்தி: இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோவின் முன்னாள் தலைவரும், புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர். கஸ்தூரி ரங்கன் உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தியறிந்து வருத்தமும் துயரமும் அடைந்தேன். டாக்டர் கஸ்தூரி ரங்கன் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் தலைவராக இருந்து, இந்தியாவின் பெருமை மிகு செயற்கைக்கோள்களான பி.எஸ்.எல்.வி. மற்றும் ஜி.எஸ்.எல்.வி. உள்ளிட்ட ஏராளமான செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்த முக்கியப் பங்காற்றியவர்.இயற்கையைப் பாது காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அவர், நாடாளுமன்ற மாநிலங்க ளவை உறுப் பினராகவும் திறம்பட பணியாற்றியவர். பத்மஸ்ரீ, பத்மபூஷன் மற்றும் பத்மவிபூஷன் உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்ற இவரது சாதனை களைப் பாராட்டி பல பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டங் களையும் வழங்கியுள்ளன.

அவரது மறைவு இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், விஞ் ஞானிகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு



புதுச்சேரி, ஏப். 26-

புதுச்சேரி இதயா மகளிர் கல்லூரியில் கணினி பயன்பாட்டு துறையும் போதைப் பொருள் தடுப்பு குழுவும் இணைந்தும் நடத்தும் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வரும் செயலாளருமான சகோதரி பாத்திமா தலைமை உரையாற்றினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ரமேஷ் காவல் (Anti Narotics Task Force, Gorimedu) 5 சிறப்புரையாற்றினார். அவரது உரையில் போதைப் பொருளினால் பாதிக்கப்படும் இன்றைய இளைய தலைமுறையினர் தங்களை எவ்வாறு இன்றைய இளைய தலைமுறையினர் தங்களை எவ்வாறு போதையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பது குறித்து உரையாற்றினார்கள்.

டாக்டர் வி.சந்திரகலா, கலைவாணி ஒருங்கிணைப் பாளர்களாக செயல்பட்ட னர். துறைத் தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர் ஆகியோர் மாணவி களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது கலந்துரை யாடலில் மாணவிகள் பலர் வினாக்கள் கேட்டு பதில் அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 150 கல்லூரி மாணவர்கள் கலந்துக்கொண்டு பங்கேற்றினர்.

# விழுப்புரத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்





விழுப்புரம், ஏப். 26-

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒன்றியங்கள் வாரியாகவும், வேளாணி சங்கங்கள் வாரியாகவும் தங்கள் கருத்து மற்றும் கோரிக்கைகளை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் முதலில் ஃபெஞ்சல் புயல் நிவாரணம் கிடைக்கப்பெறாத விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தனர். இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஃபெஞ்சல் புயல் நிவாரணம் கிடைக்கப் பெறாதவர்களுக்கு விரைந்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும், தர்பூசணி பழம் சம்மந்தமான பொதுமக்களின் அச்சத்தை போக்க தோட்டக்கலை துணை இயக்குநர் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும். பொதுவாக தற்போது கோடை காலத்தில் அதிகமாக மின் மாற்றிகள் பழுதடைந்து வருவதால் பழுதடைந்த மின் மாற்றிகளை உடன் பழுதுநீக்கம் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரக்காணம் கொளத்தூரில் தென்னையில் வெள்ளை பாதிப்பு உள்ளதால் கட்டுப்பாட்டு முறைகளை செயல்விளக்கமாக செய்து காண்பித்திட வேண்டும். ஏடிடி 37, ஏடிடி 39, வெள்ளைப்பொன்னி போன்ற விவசாயிகள் விரும்பி பயிரிடும் விதைகளை அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைத்து விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.அனைத்து ஏரிகள், குளங்கள், குட்டைகள் போன்றவற்றை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தனர். ஏரிகளில் வேலிக்காத்தான், தர்ப்பைகள் வளர்ந்து வருவதால் அவற்றை அகற்றிடவும், ஏரிகளில் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்கிட வேண்டும். வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன்பெறும் விவசாயிகளுக்கு காப்பீடு செய்வதை கட்டாயமாக்கிட வேண்டும். மத்திய அரசு திட்டத்தின்கீழ் உழவு மானியத்திற்கு பதில் உயிர் உரம் போன்ற இடுபொருட்களை வழங்குவதற்கு பதில் தொகையாக விவசாயிக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மரக்காணம் வட்டாரம் பிரம்மதேசம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் இயங்கிட ஆவன செய்ய வேண்டும் அல்லது அந்த எல்லைக்குட்பட்ட விவசாயிகள் வேறு சங்கத்தில் கடன் பெற ஆவன செய்ய வேண்டும், கூட்டுறவு கடன் சங்கங்களில் பொதுசேவை மையங்களில் விவசாயிகளுக்கு தேவையான பதிவுகளை செய்து தர வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வைக்கும் கோரிக்கைகள் தொடர்ந்து நிறைவேற்றி கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இன்று தெரிவித்த கோரிக்கைகளும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் வாயிலாக நிறைவேற்றுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷூ நிகம் வேளாண்மை இணை இயக்குநர் ஈஸ்வர், துணை இயக்குநர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) பிரேமலதா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) சிவக்கொழுந்து மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# 2030 ஆண்டிற்குள் மலேரியா இல்லாத இந்தியாவை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்

## நோய் தடுப்பு துறை மருத்துவர் சரவணன் தகவல்

புதுக்கோட்டை, ஏப். 26-

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 25 இல் உலக மலேரியா தினம் அனுசரிக்கப்படுகிறது. அவ்வகையில் இந்த ஆண்டிற்கான கருப்பொருள், மலேரியா நம்முடன் முடியட்டும் இதற்காக மீண்டும் முதலீடு செய்வோம், மீண்டும் கற்பனை செய்வோம், மீண்டும் மலேரியா இல்லா உலகை காண எழுச்சிக் கொள்வோம்.

மலேரியா என்ற நோய் பிளாஸ்மோடியம் என்ற ஒட்டுண்ணிகளால் கொசுக்களின் எச்சிலின் மூலம் மனிதர்களை கொசுக்கள் அதாவது அனோபிலஸ் பெண் கொசு கடிக்கும் பொழுது மனித ரத்தத்தில் கலந்து ரத்த உற்பத்தியை பாதித்து கல்லீரல் மண்ணீரல் போன்ற உறுப்புகளையும் முடிவில் அனைத்து உறுப்புகளையும் செயலிழக்க செய்து மூளையை பாதித்து இழப்பை ஏற்படுத்துகிறது. நான்கு விதமான ஒட்டுண்ணிகளினால் மலேரியவை ஏற்படுத்துகிறது. அதாவது பிளாஸ்மோடியம் வைவாக்ஸ்(P. Vivax) பிளாஸ்மோடியும் ஃபேல்ஸிபாரம் ( P.falciparum) பிளாஸ்மோடியம் ஓவேல்(P.ovale) பிளாஸ்மோடியம் மலேரியா(P. Malaria) என்பதாகும்.

உலக அளவில் மலேரியாவின் தாக்கம் உலக அளவில் இந்த மலேரியா 150க்கும் மேற்பட்ட நாடுகளை பாதித்துள்ளது. 2023 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி சுமார் 263 மில்லியன் மலேரியா



நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

சுமார் 5 லட்சத்து 97 ஆயிரம் இறப்புகள் 2023 ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளது. குறிப்பாக ஆப்பிரிக்கா நாடுகளை அதிகம் பாதித்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் 2020 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 532 மலேரியா பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. நம்முடைய இலக்கான வரும் 2030 ஆண்டிற்குள் மலேரியா இல்லாத இந்தியாவை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

இந்த மலேரியா குறிப்பிட்ட இடங்களில் இன்றும் பரவலாக காணப்படுகிறது. கொசுக்களின் உற்பத்தி பொதுவாக மழைக் காலங்களில் கொசு உற்பத்தி அதிகமாக உள்ளதால் அதிகமானோர் இந்த மலேரியாவால் பாதிக்கும் அபாயம் உள்ளது. மலேரியா ஒட்டுண்ணி உள்ள அனோ பிலஸ் கொசுக்கள் நல்ல நீரில் அதாவது குளம், குட்டை கிணறு மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் முட்டையிட்டு கொசு உற்பத்தியை பெருக்குகிறது.

மலேரியா நோயின் அறிகுறிகள், இதில் மூன்று நிலைகள் உள்ளன. முதலாவதாக, குளிர் நிலை (Cold stage ) அடுத்தது, காய்ச்சல் நிலை (Hotstage) அடுத்தது, வியர்வை நிலை ( Sweat stage) குளிர் நிலை, இதில் நோயாளிகளுக்கு குளிரும்; நடுக்கமும் இருக்கும்.

காய்ச்சல் நிலை, ஹாட் ஸ்டேஜ், சுரம் தலைவலி தோல் வறட்சி சோர்வு ஏற்படும் .இது இரண்டிலிருந்து ஆறு மணி நேரம் வரை நீடிக்கும். பிறகு வியர்வை நிலை அதிக வியர்வை வந்து ஜுரம் குறைய வாய்ப்புள்ளது இந்த மூன்று நிலைகளும் பிளாஸ்மோடியம் என்ற ஒட்டுணியின் வகைக்கு ஏற்ப ஒரு நாள் விட்டோ, அல்லது இரண்டு நாள் விட்டோ, ஒருவருக்கு குளிர் நடுக்கத்துடன், காய்ச்சல் வரும் இதை அப்படியே சிகிச்சை எடுக்காமல் விட்டு விட்டால் மண்ணீரல், கல்லீரல், பாதிக்கப்பட்டு இரத்தசோகை ஏற்பட்டு அனைத்து உறுப்புக்களும் செயல் இழந்து, இறப்பை ஏற்படுத்தும்.

மலேரியா ஒட்டுண்ணி ஒருவரின் ரத்தத்தில் உள்ளதா? என்பதை ரத்த மாதிரியை கண்ணாடி வில்லைகளில் வைத்து நுண்ணோக்கிக் கொண்டு உறுதிப்படுத்தலாம். மலேரியா பாதிப்புக்கு உள்ளானவர்கள் அதற்குரிய சிகிச்சை உடனே எடுத்தால் நோய் முற்றிலுமாக நீங்கும்.

மலேரியா வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும். அனோபிலஸ் என்ற கொசு உற்பத்தியை தடுக்க வேண்டும். அதற்காக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கிணறுகளில் வலைகளை பொருத்த வேண்டும். பாத்திரத்தில் இருக்கும் நீரை மூடி வைக்க வேண்டும். இதன் மூலம் கொசு முட்டை இடுவது தவிர்க்கப்படுகிறது. கொசு அதிகம் உள்ள இடங்களில் சுகாதார பணியாளர்கள் கொசு ஒழிப்பு புகையை பயன்படுத்தி கொசுவை ஒழிப்பர்.

சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். மலேரியா பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். வீட்டில் கொசு விரட்டிகள் ;கொசு விரட்டி தைலங்கள்; கொசுவலைகள்; உபயோகிக்கலாம். தூய்மையான சுற்றுப்புறமே நமக்கு நோயற்ற வாழ்வை தரும்." "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". என புதுக்கோட்டை மாவட்ட மருத்துவ கல்லூரி முதன்மை குடிமை மருத்துவர் சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்பு துறை மருத்துவர் கே. சரவணன் தெரிவித்துள்ளார்.

# IPL 2025: Sorry CSK lose four in a row at home as Sunrisers stay in the hunt with nervy win

Chennai, April 26-

It was an outing that was befitting their position in the points table before the game began. Hyderabad, placed ninth, and Chennai at the last spot, have been off-colour this season. Their losses have all been convincing and pitted against each other, they ended up taking the game deep before Hyderabad found a way to overcome Chennai for the first time here. The five-wicket win keeps them alive in the race for the play-offs as Chennai once again surrendered their fortress.



With this season going nowhere close to play-off qualification, MS Dhoni and Stephen Fleming had already hinted at planning for the season. Dewald Brewis was the newest introduction to the XI in place of the struggling Rachin Ravindra, while Sam Curran also came in. All of it meant, from a Dad's Army, they went on to field one of their youngest XIs with four of them – Noor Ahmad, Shaik Rasheed, Ayush Mhatre and Brewis – being 22 or below.

Chennai are still mathematically in with a chance of qualification for the play-offs, but with their batting unit nowhere close to finding any sort of rhythm, building towards the future is a high priority. And after Rasheed and Mhatre made good impressions, it was the turn of Brewis to show Chennai what they have been missing.

In each of their outings, while a lot has been mentioned about the shaky top order, the middle order has not fired either. On Friday, Chennai once again lost wickets in the Powerplay – Rasheed off the first ball to Mohammed Shami, Curran and Mhatre in successive overs – but they did get 50 on the board in the first six overs – only the fourth such instance this season.

With Ravindra Jadeja unable to up the ante at the end, they sent him at No 4. With poor returns against spinners, it wasn't the best of choices, but that's how thin Chennai are in terms of resources. Despite being dropped early on, he could only manage 21 before Brewis lifted them with a 25-ball 42. Among the most promising talents emerging out of the Rainbow nation, the 'Baby AB' has had a stop-start career in the IPL with Mumbai Indians. That he went unsold at the auction was an indication of the progress he had to make. But, such is the desperation from Chennai, they turned to him, and he responded in the way he knows. For a batting unit devoid of six-hitters, he hit four of them on the night before his innings was cut short by Kamindu Mendis's outstretched flying effort at long-off.

What was once again evident was Chennai's batting continues to fire blanks. On a pitch that was holding up from the very beginning, slower deliveries were always going to trouble batsmen. And in such conditions, Harshal Patel once again showed his skills, with slower deliveries and variations fetching him four wickets as Chennai were dismissed for 154.

In a season where Hyderabad's batsmen have been found wanting when it comes to batting in different gears, to overhaul this total on this surface, they had to bat out of their skins. With the presence of dew to their advantage, Hyderabad should have overhauled it with ease if their batsmen were prepared to apply themselves. But it is a batting unit lacking confidence at the moment with Travis Head and Heinrich Klaasen in particular being inconsistent. Chennai got rid of Abhishek Sharma off the second ball, and by the time they were done with the Powerplay, even Head was back in the hut.

By now, Chennai were in front and when Jadeja saw the back of Klaasen in the ninth over, Hyderabad appeared to be losing their way again. That's when Ishan Kishan, who started the season with a century, lifted them out of the rut with 44 before being dismissed by Noor. When Ishan and Aniket Sharma fell in quick succession, Chennai hoped again.

That Hyderabad were still in contention was down to two bad overs from Curran. With the asking rate mounting, they managed to get 25 off two overs from Noor and 15 off Matheesha Pathirana's. It silenced Chepauk once again as Mendis and Nitish Kumar Reddy gave Chennai their fourth successive defeat at home for the first time.

Brief scores: Chennai Super Kings 154 all out in 19.5 overs (Dewald Brevis 42, Ayush Mhatre 30; Harshal Patel 4/28, Cummins 2/21) lost to Sunrisers Hyderabad 155/5 in 18.4 overs (Ishan Kishan 44, Kamindu Mendis 32 not out) by five wickets

# சாரதா கங்காதரன் கல்லூரியில் சைட்டேஷன் டே விழா




புதுச்சேரி, ஏப். 26-

புதுச்சேரி சாரதா கங்காதரன் கல்லூரியில் மாணவ, மாணவிகளின் சாதனைகள் மற்றும் அவர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக சைட்டேஷன் டே (Citation Day), கல்லூரியின் வேலைவாய்ப்புக் குழுவால் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரியின் வேலை வாய்ப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆன், 2024–25 கல்வி ஆண்டிற்கான வேலைவாய்ப்பு அறிக்கையை வாசித்தார். அவர் தம் அறிக்கையில் சென்னையில் உள்ள Q-Spider, Prochant India pvt. Ltd உட்பட பல்வேறு நிறுவனங்களில் இதுவரை 130க்கும் மேற்பட்டமாணவ மாணவிகள் வேலைவாய்ப்பினை பெற்றிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டு இருந்தார்.

கல்லூரியின் துணைத் தலைவர் முனைவர் சு. பழனிராஜா தலைமை உரையாற்றினார். அவர் வேலை வாய்ப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஆன் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கமலக்கண்ணனுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, இந்திய அரசாங்கத்தின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் துணை மண்டல வேலைவாய்ப்பு அதிகாரி கோட்டூர் சாமி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு துவக்க உரையாற்றினார். அவர் தனது உரையில், வேலை வாய்ப்பை பெற, மாணவ, மாணவிகள் தங்களின் தனித் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். மற்றும் வேலை வாய்ப்பினை பெற்ற மாணவ மாணவிகள் மேன்மேலும் உயர தங்கள் தனித்திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். துணை மண்டல உதவி வேலை வாய்ப்பு அதிகாரியான ரவீந்திர நாத் மண்டல், வேலை வாய்ப்பினைப் பெற்ற மாணவ, மாணவிகளை வாழ்த்தினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் பாபு, இந்நிகழ்விற்கு காரணமான வேலை வாய்ப்புக் குழுவையும், ஆசிரியர்களையும் மற்றும் மாணவ மாணவிகளையும் பாராட்டி வாழ்த்தினார். நிகழ்வின் இறுதியாக வேலை வாய்ப்பினை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பணி நியமன பத்திரம் வழங்கப்பட்டது.

# உழவர்கரை தொகுதி கம்பன் நகரில் நீர் மோர் பந்தல் அமைச்சர் நமச்சிவாயம் திறந்து வைத்தார்



புதுச்சேரி, ஏப். 26-

புதுச்சேரி உழவர்கரை தொகுதி கம்பன் நகரில் பாஜக செயலாளர் சரவணன் ஏற்பாட்டில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அமைக்கப்பட்டுள்ள நீர் மோர் பந்தலை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் கலந்துகொண்டு திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், தர்பூசணி பழங்களை வழங்கினார்.

புதுச்சேரி மாநிலத்தில் கடந்த சில தினங்களாகவே வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள பழச்சாறு கடைகளிலும். தர்பூசணி கடைகளிலும் குவிந்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில் மக்களை வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள பல்வேறு கட்சி சார்பில் ஆங்காங்கே நீர் மோர் பந்தல்கள் அமைக்கப்பட்டு இலவசமாக நீர், மோர், பழங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் புதுச்சேரி உழவர்கரை தொகுதியில் பாஜக மாநில செயலாளர் சரவணன் தலைமையில் மக்களின் நலனுக்காக தொடர்ந்து மூன்றாவது வருடமாக நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. கம்பன் நகர் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள நீர் மோர் பந்தல் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார். பின்னர் அவ்வழியாக சென்ற பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு மோர் மற்றும் தர்பூசணி உள்ளிட்ட பழவகைகளை கொடுத்தார். மேலும் பாவாணர் நகர், ரெட்டியார் பாளையம் கம்பன் நகர், உழவர்கரை, மூலக்குளம், அரும்பார்த்தபுரம் உள்ளிட்ட ஐந்து இடங்களில் தினந்தோறும் உழவர்கரை தொகுதி முழுவதும் இலவச நீர் மோர் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது. நிகழ்வில் பாஜக நிர்வாகிகள் மகேஷ், கனகலிங்கம், ஆண்டனி ஜோசப், தக்கக்குட்டை ராஜா, ஜோசப், ஆல்பர்ட் ராஜா, ராம்போ ராஜா, நட்ராஜ், முருகன், ஆறுமுகம், பிரான்சிஸ், ஜோசப், அரும்பார்த்தபுரம் இளையராஜா, சபரி, பிச்சைவீரன் பேட் முனுசாமி, மூலக்குளம் வேலாயுதம், ரஜினி, முனுசாமி, ஜவகர் நகர் விஜய பாரதி, ராஜி, ராஜசேகர் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

# நடமாடும் மண் பரிசோதனை வாகனம் துவக்கம்



வேலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையின் சார்பில் நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி.

# முஸ்லிம் ஏழை மகளிர்களுக்கு உதவித்தொகை வழங்கல்




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைபின் மூலம் செயல்படும் தூத்துக்குடி மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்க ஆண்டு பொது குழுக் கூட்டத்தில் 10 முஸ்லிம் ஏழை மகளிர்களுக்கு உதவித்தொகையாக ரூ.15,000க்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் வழங்கினார்.

# துணிப்பை வழங்கிய ஆட்சியர்




பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டிற்கு மாற்றாக துணிப் பைகளின் பயன்பாடு குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை மற்றும் தேசிய பசுமைப்படை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி துணிப்பைகளை சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார்.

# வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம்



திருவண்ணாமலை, ஏப். 26-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக 18 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராம ஊராட்சிகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நேரடியாக சென்று ஆய்வுகூட்டம் நடத்தி, தொடர்ந்து கண்காணித்து ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

அதன்படி தொடர்ந்து இன்றையதினம் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2024–25 ஆம் நிதியாண்டில் 3114 வீடுகளும், 2025–26 ஆம் நிதியாண்டில் 5051 வீடுகள் கட்டப்பட்டு வருவது குறித்தும், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ் 2024 –25 ஆம் நிதியாண்டில் 2305 சிறிய அளவிலான பழுதுகளும், 2910 பெரிய அளவிலான பழுதுகள் என மொத்தம் 5215 வீடுகள் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவது குறித்தும், இலங்கை தமிழர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் அடிஅண்ணாமலை சமுத்திரம், அத்தியந்தல் கனத்தம்பூண்டி, சொரகுளத்தூர், தென்பள்ளிப்பட்டு, கஸ்தாம்பாடி, தவசி, செங்காட்டன்குன்றில், பாப்பந்தாங்கல், ஒசூர் ஊராட்சிகள் என மொத்தம் 830 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருவது குறித்தும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், அயோத்திய தாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தூய்மை பாரத இயக்கம் (கிராமியம்), பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும், கேட்டறிந்து பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், தற்போது புதியதாக தொடங்கப்படவுள்ள முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த பயனாளிகளை உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்து கருத்துருவினை அனுப்புமாறும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், மக்களுக்கு அடிப்படை தேவையான குடிநீர் திட்ட பணிகளை விரைந்து செயல்படுத்தி கோடை காலத்தில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டுமென்றும், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை முறையாக பராமரிக்க வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். தொடர்ந்து குழந்தைநேயபள்ளிஉட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைகள், சுற்றுச்சுவர், இருப்பு அறையுடன் கூடிய சமையல் கூடம், கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்றும், மேலும் 18 ஊராட்சி ஒன்றியங்களில் 250 அங்கன்வாடி மையங்கள் சிறிய மற்றும் பெரிய அளவிலான பழுது நீக்கம்,

குடிநீர் இணைப்புகள், மின் இணைப்புகள் போன்ற புணரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் தற்போதைய நிலை குறித்து ஆலோசனை மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மணி, திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் மீனாம்பிகை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) சையத் பயாஸ் அகமத், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) கிருஷணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் (வளர்ச்சி) இளங்கோ, அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# மாணவர்களின் திறனை மேம்படுத்தவே 'நான் முதல்வன் திட்டம்-மு.க.ஸ்டாலின்

# பஹல்காம் தாக்குதலில் நடுநிலையான விசாரணைக்கு தயார்-பாகிஸ்தான் பிரதமர்



# சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்து-3 பேர் பலி


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com



• 26-4-2025 சனிக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்